DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC 136/2021 |
| Depostition of witness for | Prosecution wit. PW.5 |
| Name | முத்துக்கனி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 18-08-2022.

முதல்விசாரணை தொடர்ச்சி

1. நான் தற்போது செய்துங்கநல்லூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.08.2019 ம் தேதி 17.00 மணிக்கு நிலையப்பொறுப்பில் இருந்த போது திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலையத்திலிருந்து கிடைக்க பெற்ற காயத்தகவலின் படி புறக்காவல் நிலையம் சென்று காயத் தகவலை பெற்று மேற்படி அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பிரதாப் என்பவரிடம் 18.00 மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்று பினனர் 19.00 மணிக்கு நிலையம் வந்து மேற்படி புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.105/2015, 294(b), 323,**

**506(ii) IPC** வாக வழக்கு பதிவு செய்தேன். அதன் அசல் நகலை கனம் JM அவர்களுக்கு அனுப்பி வைத்தும் இதர நகலை ஆய்வாளர் அவர்களின் அனுப்பி வைத்தேன். இதர நகலை சம்மந்தப்பட் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும். ஆய்வாளர் வசம் நகல் ஒப்படைத்தும் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்வம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . புகார்வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.